**CC.No.239/2020 (JM.No.II, DHARMAPURI)**

**17.06.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW–5 : திருமதி.சர்மிளாபானு (காவல் ஆய்வாளர்)**

**முதல் விசாரணை**

நான் நாமக்கல் மாவட்டம் நல்லிபாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 13.03.2020 காலை 07.00 மணிக்கு சாமிநாதன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காவல் உதவி ஆய்வாளர் நடராஜன் என்பவர் குற்ற எண்.61/2020 சட்டபிரிவு 279, 304எ வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை பெற்று கொண்டு, சம்பவ இடமான பாளையம்புதூர் 4ரோடு அருகே காலை 07.30 மணிக்கு ஆஜராகி சாட்சிகள் கண்ணன், கோவிந்தராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். பின்னர் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு வந்து அடைந்த 09.45–11.45 மணி வரை சவக்கிடங்கில் வைக்கப்ட்டு இருந்த சக்திவேல் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் சாமிநாதன், சீனிவாசன், முருகேசன், சபரிநாதன், ராஜமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்காக முதல்நிலை காவலர் குமரவேல் வசம் ஒப்புவித்தேன். பின்னர் அன்றையதினமே விபத்தைநேரில் பார்த்த சாட்சியான அறிவு, லாரியின் உரிமையாளர் கீர்த்திவர்மன் என்பவரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். நிலையம் வந்தடைந்து 13.03.2020 அன்று 16.15 மணிக்கு எதிரி கார்த்திகேயன் என்பவரை கைது செய்து தக்க இருநபர் ஜாமினில் விடுவித்தேன். பின்னர் 13.03.2020 அன்று விபத்து ஏற்படுத்திய TN–52 L–9465 வாகனத்தையும், 16.03.2020 அன்று இறந்தநபர் ஓட்டிவந்த TN–77 X–1397 யுனிகான் மோட்டார் வானக ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கிய மருத்துவர் மதன்ராஜ் என்பவரை விசாரித்தும், விபத்துக்குள்ளான வாகனத்திற்கு ஆய்வறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் மணிமாறன் என்பவரை விசாரித்தும், பிரேத விசாரணையின்போது உடன் இருந்த முதல்நிலை காவலர் குமரவேல் என்பவரையும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் நடராஜன் என்பவரையும் விசாரித்தும், தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் இ.த.ச பிரிவு 279, 304ஏ எதிரி கார்த்திகேயன் மீது 09.06.2020 அன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4, பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5, பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.6, TN–52 L–9465 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7, TN–77 X–1397 கார் என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து 12.03.2020 அன்று நடந்தது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு 13.03.2020 அன்று காலை 07.00 மணிக்கு வழக்கு கோப்புகள் என்னிடம் கொடுக்கப்பட்டது. சம்பவ இடத்தை எனக்கு புகார்தாரர் அடையாளம் காட்டினாரா

என்றால் இல்லை, சம்பவ இடத்தில் அருகே இருந்தவர்கள் அடையாளம் காட்டினார். அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கில் விபத்தில் ஈடுபட்ட லாரி பெரிய goods வாகனம் என்றால் சரிதான். லாரி வலதுபுறம் வளையும்போது லாரியின் பின்புற வலது சக்கரத்தில் இருசக்கர வாகனம் மோதியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்து சாலையின் வலதுபுறத்தில் நடந்தது என்றால் சரிதான். விபத்தில் இறந்த சக்திவேல் சாலை விதிகளை பின்பற்றாமல் இடதுபுறம் வராமல் வலதுபுறமாக சாலை விதிகளை மீறி வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், சாலை விதிகளை பின்பற்றி வந்திருந்தால் விபத்தை தவிர்த்து இருக்கலாம் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தின் அருகே தான் தங்கராஜ், கணேசன், தீபன் ஐயங்கார் பேக்கரி கடைகாரர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் CCTV கேமிரா இல்லை. துரைசாமி மளிகை கடை பேக்கரி கடை விபத்து நடந்த இடத்திற்கு தென்மேற்கு பகுதியில் உள்ளது என்றால் சரிதான். துரைசாமி மளிகை கடையில் இருந்து விபத்து நடந்த இடத்தை சரியாக பார்க்கமுடியாது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த சக்திவேல் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் அவருடையது இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சிகள் அனைவரும் விபத்தில் இறந்த சக்திவேல் உறவினர்கள் என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், காப்பீடு பெற வேண்டி கொடுக்கப்பட்ட பொய்யான புகாரை நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.17 17:21:54 +0530